# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஆகஸ்ட் 06, 2023

Weekly E-paper • August 6, 2023




## திராவிட இயக்கத் தமிழர் பேரவை வழங்கிய ‘கருஞ்சட்டை விருது’ விழா!

எழில்.இளங்கோவன்

## இட்லர், முசோலினி - விதி ஒன்றுதான்!

தலையங்கம்

## நேற்று மணிப்பூர்; இன்று ஹரியானா! ‘மதம்’ பிடித்த பாஜகவைத் தூக்கி எறிவோம்!

மா. உதயக்குமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஆகஸ்ட் 06, 2023

Weekly E-paper ● August 6, 2023


## திராவிட இயக்கத் தமிழர் பேரவை வழங்கிய ‘கருஞ்சட்டை விருது’ விழா!

எழில்.இளங்கோவன்

திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக 05-08-2023 அன்று, சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கத்தில் ‘கருஞ்சட்டை விருது’ வழங்கும் விழா நடைபெற்றது.

2023 ஆம் ஆண்டுக்கான ‘கருஞ்சட்டை விருது’களைத் தி.மு.க வின் தஞ்சை கூத்தரசன், திராவிடர் கழகப் பிரச்சார அணிச் செயலாளர் அ.அருள்மொழி, பேரவைத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு. மாறன் ஆகிய மூவருக்கும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

ஆயிரம் விளக்குச் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் மற்றும் திரைப்பட இயக்குநர் திரு கரு. பழனியப்பன் ஆகியோர் தம் வாழ்த்துரைகளை அரசியலில் கலந்து ஆற்றினர். எதிர்வரும் காலங்களில் காவிக் கூடாரங்களுக்கு எதிராகக் கருஞ்சட்டைக்காரர்கள் ஆற்றவேண்டிய பணிகளை முன்னெடுத்துச் செல்ல இத்தகைய ‘கருஞ்சட்டை விருது’கள் ஊக்கப்படுத்தும் என்பதை

தொடர்ச்சி அடுத்த பக்கம் ...





















**முன்பக்க தொடர்ச்சி..**

மையப்படுத்திப் பேசினார்கள்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் புரட்சிப் பாடகர் கோவன் குழுவினரின் அரசியல் இசைப்பாடல்கள் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்தன.

திராவிட நட்புக் கழகத்தின் சார்பாக குழந்தைகளின் கல்வியை ஊக்கப்படுத்தி வழங்கிய பரிசுகள் நெஞ்சிற்கு நிறைவாக இருந்தன. அத்துடன் தேர்வு செய்யப்பட்ட வலையொழி ஊடகவியலாளர்களும் சிறப்பு செய்யபட்டனர்.

தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தன் தலைமை உரையில், இவ்விழா சிறப்புற அமையக் காரணமான தோழர்கள் செல்வின் சௌந்தர்ராஜன் உள்ளிட்ட தோழர்களின் பணிகளை வாழ்த்தியமை, தோழர்களுக்கு ஊக்கமருந்தாக அமைந்தது. விருதாளர்கள் ஏற்புரை வழங்கினார்கள்.

தொகுப்புரை ஆற்றினார் தோழர் நெல்லை பாபு. நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார் தோழர் ப.எட்வின்.●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இட்லர், முசோலினி - விதி ஒன்றுதான்!

உலகத்திலேயே மிகச் சிறந்த ஜனநாயகத்தை நாங்கள் தான் (இந்தியா) கடைப்பிடிக்கிறோம் என்று உலகம் சுற்றும் பிரதமர் மோடி சொல்லிக் கொண்டு இருக்கிறார்

மணிப்பூரில் நடைபெற்ற வன்முறைக் கலவரம், இடிக்கப்பட்ட தேவாலயங்கள், மசூதிகள், கோயில்கள், வதைக்கப்பட்ட மக்கள், சொல்வதற்கு நா கூசும் பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள், கொலைகள், இவைகள் எதையும் வெளிவராமல் இணையம் மற்றும் ஊடகச் சேவைகளை முடக்கிப் போட்ட மோடியின் பா.ஜ.க ஜனநாயகத்தை உலகமே வெட்கித் தலைகுனிந்து பார்க்கிறது.

இது குறித்து விவாதிக்க ‘இந்தியா’ கூட்டணி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேரவைத் தலைவரிடம் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கேட்டாலும் பயனில்லை.

நாடாளுமன்றம் வருகிறார் பிரதமர், அவரின் அலுவலகம் செல்கிறார். ஆனால் நாடாளுமன்ற இரு அவைகளுக்கு மட்டும் அவர் வருவதில்லை.

மணிப்பூரில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல், அங்கு அமைதிப் பேரணி நடத்தாமல், தமிழ்நாட்டில் ஒரு நடை பயணத்தை நடத்திக் கொண்டு இருக்கிறது பா.ஜ.க. இந்நடை பயணத்தைத் தொடக்கி வைத்தவர் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா. இது தான் மோடி சொல்லும் ஜனநாயகமா?

நாடாளுமன்ற இருஅவைகளிலும் எதிர்ப்பு, கூச்சல் குழப்பம், ஒத்திவைப்பு என்று இருந்தாலும், பிரதமர் இல்லாமலே, விவாதம் இல்லாமலே பா.ஜ.கவுக்குச் சாதகமான மசோதாக்கள் நிறைவேற்றப் படுகின்றன.

எடுத்துக் காட்டாக டில்லியில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் இருந்தாலும், அவரின் அதிகாரத்தைப் பறிக்க உச்ச நீதிமன்ற உத்தரவை மீறிச் சட்ட மசோதாவை நிறைவேற்றுகிறது பாசிச பா.ஜ.க அரசு.

அதாவது டில்லி துணை நிலை ஆளுநர் இரண்டு ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை நியமிப்பாராம். டில்லி முதலமைச்சருடன் இந்த அதிகாரிகள் சேர்ந்து மாநிலப் பிரச்சனைகளைப் பேசுவார்களாம். இறுதிமுடிவு அந்த அதிகாரிகள் எடுக்கும் முடிவுதானாம். அப்படியானால் முதல்வர் கெஜ்ரிவால் அதிகாரமற்ற ஒரு பொம்மைதான். இது தான் மோடியின் ஜனநாயகமா?

உயரஉயரப் பறந்தாலும் தரையில் இறங்கித்தான் ஆக வேண்டும். அவர்கள் இட்லர்களாக இருந்தாலும் சரி, முசோலினிகளாக இருந்தாலும் சரி, விதி ஒன்றுதான்.

ஜனநாயகப் படுகொலையை, அதே ஜனநாயத்தைக் கொண்டுதான் சரிசெய்ய வேண்டும்.

அந்த வேலையை 2024 ஆம் ஆண்டில் மக்கள் செய்வார்கள். அதற்கு ‘இந்தியா’ எதிர்க்கட்சிக் கூட்டணி கடுமையாகவும், கவனமாகவும் உழைக்க வேண்டும்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408



# நேற்று மணிப்பூர்; இன்று ஹரியானா!

# ‘மதம்’ பிடித்த பாஜகவைத் தூக்கி எறிவோம்!

மா. உதயக்குமார்

ஹரியானாவின் நூ மாவட்டத்தில் மதக் கலவரம் ஏற்பட்டு இதுவரை பத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி இருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.. பலர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். தொடர்ந்து நிலவும் பதற்றத்தாலும், ஊரடங்கு உத்தரவாலும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

ஒரு சிலரின் சுயநலத்திற்காக இத்தனை மக்கள் வதைக்கப் படுகின்றனர். மக்களை ஒருவருக்கொருவர் மோதச் செய்யும் கொடூரச்செயல் ஒருசமூக அமைப்பில் வாடிக்கையான ஒன்றாக பழக்கப்படுத்தப்பட்டு வருவது மனிதநேயத்திற்கு எதிரானது. இதனைத் தொடர் செயல்பாடாகவே மேற்கொண்டு வருகின்றன பாஜக, ஆர்எஸ்எஸ், விஷ்வ இந்து பரிஷத், பஜ்ரங் தள் மற்றும் பிற சங்க் பரிவார அமைப்புகள்



மதங்கள் இருக்கிற வரைக்கும் மதக் கலவரங்கள் இல்லாமல் இருக்காது. ஆனால் நவீன வாழ்க்கை முறையில் மதங்களின் தாக்கம் குறையத் தொடங்கினாலும், மக்கள் மதங்களைக் கடந்து ஒற்றுமையாக வாழ நினைத்தாலும் மதவெறியர்கள் விடுவதில்லை. அரசியல்கொள்கைமதத்தத்துவங்களின் அடிப்படையில் வகுக்கப்படுமானால் அங்கு மதம் மக்களின் நம்பிக்கையாக இல்லாமல் அடையாளமாகவும், அடிப்படைவாதமாகவும், தீவிரவாதமாகவும் மாறிவிடும். மதங்கள் இருக்கிற வரைக்கும் மதத்தின் ஆதிக்கம் அரசியலில் இருந்து கொண்டேதான் இருக்கும். எத்தனைச் சீர்திருத்தவாதிகள் வந்து மதத்தையும், அரசியலையும் பிரிக்க நினைத்தாலும் இரண்டையும் இணைக்க பிற்போக்குவாதிகள் முயற்சி செய்து கொண்டே இருப்பார்கள். இந்தியா என்னும் நாட்டின் தோற்றுவாயிலிருந்து இன்று வரையிலும் இந்தப் போக்கைக் காணமுடியும். இங்கு மதமே அரசியலின் மையப் புள்ளியாக இருந்து வருகிறது. மதத்தின் பேரால் மாய்க்கப்பட்ட மனித உயிர்களின் புள்ளிவிவரத்தை வரலாறு பதிவுசெய்து கொண்டே வருகிறது. மதக்கலவரத்தின் மூலமே இந்தியாவில் அரசியல் சக்தியாக வளர்ந்த வரலாறு உடையது இன்றைய ஒன்றிய அரசை ஆளும் பாஜக. அப்படி ஒரு கலவரத்தைத்தான் இப்போது ஹரியானாவிலும் நிகழ்ந்தியிருக்கிறது பா.ஜ.க.

“மேவாட்” என்று சொல்லப்படும் ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களை ஒட்டிய பகுதிகள் மிகவும் பதற்றமானவை. அங்கு ஒரு பதற்றம் ஏற்படுமாயின் அது பெரிய அளவில் மற்ற மாநிலங்களிலும், இந்தியாவின் தலைநகரான டெல்லியிலும்கூடப் பரவக்கூடும். ஆகவே அந்தப் பகுதி கலவரத்திற்காக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. அந்த மாநிலத்தின் அதிகாரம் பாஜகவிடம் இருப்பதால் சட்டம் ஒழுங்கைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் கலவரத்தை நடத்தி இருக்கிறார்கள் சங்பரிவார அமைப்புகள்.

ஹரியானாவின் நூ மாவட்டத்தில் நடைபெற்ற மதக் கலவரம் திட்டமிட்டே நடைபெற்ற ஒன்று என்பது அனைத்து ஊடகங்களிலும் சொல்லப்படும் கருத்தாக இருக்கிறது. இது யூகத்தின் அடிப்படையிலோ, அல்லது சில நிகழ்வுகளின் மையப் புள்ளிகளை இணைத்தோ அல்லது ஒப்பிட்டோ சொல்லப்படும் கூற்று அன்று. தரவுகளின் அடிப்படையில் உறுதியாகச் சொல்லப்படும் உண்மையாகும்.

விஷ்வ இந்து பரிஷத் நடத்திய பிரிஜ் மண்டல் ஜலாபிஷேக் யாத்ரா ஊர்வலத்திற்கு 2022 ஆம் ஆண்டு பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்ட காவல்துறையினரின் எண்ணிக்கை 2500. ஆனால் இந்த ஆண்டு 800 காவல் துறையினர் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளனர். சமூக ஊடகங்களில் தொடர்ந்து வந்த வன்முறையைத் தூண்டும் பதிவுகள் ஒரு புறமும், வன்முறைக்கான அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிந்த சூழல் இன்னொரு புறமும் இருக்க பாதுகாப்புக் காவலர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைக்கப் பட்டிருக்கிறது. இன்னும் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு குளறுபடிகள் நடந்திருக்கின்றன. சட்டம் ஒழுங்கைக் காப்பதே ஒரு அரசின் தலையாய கடமை. ஆனால் வேலியே பயிரை மேய்வதைப் போல, தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய வன்முறை ஹரியானாவில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. மனிதஉயிர்கள் மதவாதிகளின் இச்சைக்குப் பலியாகியிருக்கின்றன.

பாஜக ஆட்சியில் வறுமைநிலை, வேலைவாய்ப்பின்மை பற்றிய புள்ளி விவரங்களை ஒன்றிய அரசின் நிறுவனங்களே வெளியிட்டு வரும் வேளையில், அவை பற்றிப் பேசவிடாமல் மதக்கலவரங்களைத் தூண்டித் திசை மாற்றி, அச்சமூட்டி தேர்தலுக்கான உத்திகளைத் தொடங்கி இருக்கிறது பாஜக.

ஏழை எளிய மக்கள், தினக் கூலிகள் இன்று ஹரியானாவை விட்டு அச்சத்தின் காரணமாகவும், வாழ்வாதாரத்தின் பாதிப்பு காரணமாகவும் அகதிகளாக வெளியேறி வருகிறார்கள். சிறுபான்மையினராக இருக்கும் இஸ்லாமியர்களோ உயிர்ப்பயத்தில் ஒவ்வொரு நொடியையும் கழித்து வருகின்றனர்.

மதங்களை மறந்து மனித நேயம் கொண்ட கொள்கைகளைப் பின்பற்றும் கட்சிகளுக்கே மக்கள் அதிகாரம் அளிக்க வேண்டும். அந்த விழிப்புணர்வை தமிழ்நாட்டைப் போல வட மாநிலங்களிலும் ஏற்படுத்திட இன்று அமைக்கப்பட்டிருக்கும் இந்தியா(I.N.D.I.A) கூட்டணி தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்பது மிகமிக அவசியமாகும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian